## செவ்வாய் வாழ்த்து!


சேயோன் முருகனின் சிங்கார நாளிது வென்பார்!
மாயோனின் மருமகனாய் மனங்கூட்டிச் சொன்னாலும்,
காயென்றழைக்க சிலரின் குல காவல் தெய்வமவன்!
தாயன்பாய் தொழுதேற்ற தங்கத் தமிழன் என்பார்!
குன்றுதோறும் நின்றேறிக் குவலயத்தை ஆள்பவனோ!
குன்றாத சீரோடுக் காத்தருளும் குலச்சாமி யானவனும்,
மன்றிலின்றோ இச்சா கிரியாவாய்; இருதேவியோடும்;
தென்சிவனாரின் மகனாக செவ்வாயால் காப்பான் சிறந்து!
- **கவிவளவன்** 05-01-2021 (5.45AM)

## இனிய காலை வணக்கம்!

பொன்னெனப் பிறக்கும் புதனால்,
புதுமைகள் வந்து சேர்க!
நுண்ணிய கிருமி நீங்கி,
நோயின்றி வாழ்வு பெறுவோம்!
மன்னிய வழக்காய் நிறைந்து,
மருவிலா அன்பு செய்வோம்!
திண்ணியசீர் அன்பினாலே,
தெவிட்டாத வாழ்வு கொள்வோம்!
- **கவிவளவன்** 30-12-2020 4.40 AM


## இயற்கை எழில்!

பூக்கள் சிந்திய முத்துக்கள் யாவும் - அந்தப்
பனித்துளி தந்த கொடையோ! - அந்தப்
பகலனின் எழுச்சியால்,
இலைகள் கொண்ட சிலிர்ப்போ!
மழையில் ஒடுங்கும் குயில்கள் கூட
மழையை என்றும் வெறுத்ததில்லை!
கொட்டும் மழையால், மொட்டு மலரோடு
இலைகள் இழந்தும் மரங்கள் வருந்தாது!
கொட்டடி யின்றி காட்டில் திரியும்
விலங்குகள் மழையால் வருந்தலுண்டோ?
மண்ணில் பிறந்த அத்துணை உயிரும்
இயற்கையில் இணையும் போது,
மானுடம் மட்டும் தவிப்பது ஏனோ?
**கவிவளவன்** 03-01-2021





## இயற்கை எழில்!



கொட்டுகின்ற மழையிதுவும்
குவலத்தின் தேவை!
தட்டுகின்ற தாளமதாய்
தவளைகளின் கூச்சல்!
மொட்டவிழும் பூக்கள்சில
மண்மீதில் வீழும்!
பட்டுக்கரங் கொட்டி பள்ளி செல்லாப்
பிள்ளையது சிரிக்கும்!
மொட்டவிழா கங்குலென
முழுநாளும் போகும்!
தட்டுத் தடுமாறும் உழவன்மனம்
வானத்தையே நோக்கும்!
சிட்டுக்குருவிகளும் சீறும்ஆந்தையதும்
தன்கூட்டில் ஒடுங்கும்!
கிட்டியச் சூழலிது
இயற்கையதன் தோற்றம்!
மட்டிலா மகிழ்ச்சி கொள்வீர்
மனஞ்சோர்ந்து அலையாதீர்!
- **கவிவளவன்** 03-12-2020 (6.40AM)

## இந்தநாள் இனிது!

புலர்காலைப் பொழுதிலோர் மயக்கம்! - அது
பொழிந்திட்ட மழைநீரின் தாக்கம்!
அலைமோதி நீரோடி நெய்திட்டச் சூழல்! அதில்
பூமாதா குளிர்திட்ட கோலம்!
பலமிக்கக் காற்று செய்யும் பரிதாபச் சூழல் - இந்த
மழையால் மண்ணுயிர்கள் காண்பதுதான் இல்லை!
குளமாக நீர்தேங்கித் தொல்லையது ஆதல் - இந்த
மாந்தரது ஆசை தந்த விளைவே!
தளமென்று உடல் வருத்தி தரணியிலே வாழாதீர்! - இந்த
வாழ்க்கையும் நிலையில்லை! வளங்களும் நிலையில்லை!
அலகிலா விளையாட்டை நிகழ்த்தும்
மாயவனை அறிவோம்! - இந்த
மண்ணில் வாழும்வரை மகிழ்வுடனே வாழ்வோம்.!
- **கவிவளவன்** 19-12-2020 7.15 AM



## பாரதி!

பாட்டுக்குத்தலைவனோ!
பாட்டுடைத் தலைவனாய்,
கூட்டுக்குள் பலநூறு பேரோடு,
மீட்டாத சீர் இசையாய் மேதினியில்,
பாட்டால் நிறைந்தவனோ,
பார்மிசை தமிழால் ஆள்பவனோ!
கேட்டாலும் திகட்டாதே
பாரதியின் தெள்ளமுதே! தமிழே!
- **கவிவளவன்** 11-12-2020

## அறிவே! அருளே!

சோதிடமும் பொய்யே!
சொக்கன் சொல்,
வாதிடவும் பொய்யே!
நீதி வழுவா நெஞ்சத்துள்;
நிறையும் இறையே! அறிவே!
ஆதியாய் நின்ற ஜோதியே! ஒளியே!
சூதிலா அறிவே! நிறைந்து ஏக!
மாதவன், அச்சுதன்,
மருவிலாக் கண்ணனாய்க்
கச்சி ஏகம்பனே காப்பான் நிறைந்து!

- **கவிவளவன்** 08-08-2020 (07.10 AM)

## கொடையோ!

ஒளியாய்ப் பிறந்து;
உலகமும் பிறக்க,
வளியும் தோன்றிட,
வான்முகம் மிளிர;
ஒளியாய்த் திகழும்;
அழியாப் பரம்பொருள்,
அளித்த கொடையோ,
இயன்நிலை வாழ்வு!

- **கவிவளவன்**

## ஈசனடி போற்றி!

ஈசனடி போற்றி!
எந்தையடி போற்றி!
நீசமனம் நீங்கி,
நெறியோடு வாழ;
வேசமிடும் கலங்கள்,
வேரோடு களைவோம்!
பாசமிகு இறையின்,
பாதந்தனை அடைவோம்!

- **கவிவளவன்**
[7/9/2020, 7:31 am]

## வேங்கடவன்!

பார்புகழும் நேரியனோ!
பரந்தாமன் தான் அவனோ!
ஊர் சொல்லும் அவன் பெயரை!
உன்னத நாளுமிதாம்!
கார் மேகக் கள்வனாம்,
கனங்குழையான் வேங்கடனை
தார் மீக அன்போடு
தாலாட்டும் நேரமீது!

சீர் புரட்டாசி வந்ததென்றால்
சென்னையே பரபரக்கும்!
சீர்குடையும் புறப்படும்
சீராளன் புகழ்மணக்க!
யார் சென்று அழைத்தாலும்,
எழுந்தனைக்கும் பேராளன்!
பேர் சொல்வர் காக்கும் கடவுளென!
அந்தப் பேரின்ப வடிவத்தானை!

- **கவிவளவன்** [27/9/2020, 6:28 am]

## இன்றைய வைகறை!

# கொப்பளித்ததது பூமி!
மரங்கள்;
இடுப்பொடிக்கும் வேகம்!
காணாமல் போயிட,
குளிர்ந்த வருடல்,
பூமிப் பரப்பில்,
சுவடுகள் இல்லை!

# வாழும் பூதத்தின்,
மீதான,
நிறைந்த பூதத்தின்,
பாசத்தை,
உயிர்க்கும் பூதம்,
உறவாடிக் கெடுக்க,
தூரத்தில்,
என்றும் காய்க்கும்;
பூதம் மட்டுமே,
கரங்களைநீட்டும்;
பூமிக்கு!

**கவிவளன்** 25-04-2020
(7AM)

## அன்பில் நிறையுங்கள்!

நின்றதும், நிலைப்பதும்,
நினைவில் கரைவதும்,
மன்றினில் ஆடும்
மாயக் கூத்தன்,
எழுதிய விதியோ!
இயன்நிலை யாமோ!
தென்றலோ! புயலோ!
தெய்வ வடிவோ!
அன்றலர் மலராய்,
அன்பில் நிறையுங்கள்!
பொன்னென ஈசன் நெஞ்சில்,
பொலிவான் நிறைந்து!
**18-02-2021**


## மனம் தேறுக!

தன்னறிவைக் காத்தவன்,
தன்னைக் காத்தவன்!
சொல்லறிவைக் கேட்பவன்,
சுயத்தை இழந்தவன்!
பட்டறிவால் வீழ்பவன்;
பாதை மறப்பவன்!
தொட்டவைத் துலங்க;
தோல்வியை மறக்க,
நிற்பவை, நடப்பவை,
நிறைந்தவை மனதிலேற்றுக!
சாற்றும் மொழிகள்;
மொழிபவர் புலம்பல்!
காற்றாய் மனத்தில்,
அவற்றை நீக்கிட,
உண்மை நிலையை
உட்கார்ந்து தேட,
மட்டிலா மகிழ்வே
மாறாதிருக்கும்!
08-05-2021 (07.15 AM)
(ம.கீ. பக்—18)

## தொழுதிடுக!

நெடிதுயர்ந்து நின்றானை,
நேரிய தமிழ்மகனை;
வாடுவார் தம்மனதில்,
வகையறிந்து நிற்பானை;
நாடுவார் தமக்கு
நலங்கள் செய்வானை;
பாடியேத் தொழுதிடுக!
பரந்தாமன் சீலனென!!

- **கவிவளவன்**
[1/10/2020, 6:35 am]





## மணம் கமழும்!

காணக்கிடைக்காத
கற்பகத் தருவை;
கருணையை,
உள்ளமெனும் வலையால்,
ஓங்காரச் சொல்லடுக்கித்
தேடிவிடத்,
தூண்டில் புழுவின்றி
வலைவிழும் மீனாகத்,
தேடுமிட மெல்லாம்
தெய்வீக மணம் கமழும்!
அச்சுதா, அனந்தா,
அரனே என்று
ஆர்ப்பரித்து மனம் மகிழும்!
**05-07-2020**

## அறிவோம் மனிதா!

பிறப்பின் நோக்கம் தெரியாத போது,
பிறந்ததை எண்ணி வருந்தாதீர்!
இறப்பும் ஓர்நாள் நிகழும் ஆதலால்,
எதனிலும் பெருமையைக் கொள்ளாதீர்!
உயிர்கள் அனைத்தும் சமமே அறியீரோ!
உன்னதமாய் வாழவே நாம் நினைப்போம்!
ஒன்றையொன்று அழித்தே உண்டு;
உலக வாழ்வை தினம் நகர்த்தும்!
-வேறு-
கொன்றால், பாவம் தின்றால் போச்சு வாழ்வியலே!
தன்னிலை உயர்வென்று தாமே எண்ணும் மானிடமே!
தரமின்றி வாழ்வியல் செய்வது மண்ணில் எவ்வுயிரோ!
கவிவளவன் 24-04-2021 (6.20AM)

## மனம் தேடுவோம்!

எல்லோர்க்கும் இந்தநாள் இனியதாய்க் கழியட்டும்!
வல்லவன் இறையவனே, வழிகாட்டி நிற்கின்றான்!
நல்லதாய் மனம் கூட்டி, சிந்தையைச் செப்பனிடு!
அல்லவை செய்வதும், அடுத்துதான் அழுவதுவும்
பொல்லாத மனம்தானே! சோதனைகள் ஏதுமில்லை!
சொல்லிலே தெய்வமுண்டு
நல்லதாய் மனம் நினைந்தால், நாடுவதும் கைகூட,
எல்லாமும் இன்பமாகும்! எல்லாமே அழியுங்கால் ஏனிந்த பிறப்பும்தான்?
சொல்வதும் சொன்னதுமாய் சோதிக்கும் வாழ்வேதான்,
இல்லாது போய்விட, இன்பமாய் வாழ்ந்திடலாம்!
கவிவளவன் 22-03-21 (5.55 AM)

## எங்கள் பொன்னடி!

முல்லைச்சரம்
வெள்ளிவிழா மலருக்கு
எழுதியது -1990



சுற்றியொரு கூட்டமென சொந்தமந்த
தமிழுமென வாழுவான் – எங்கள்,
தங்கக் கவிவாணன் அவன் ‘பொன்னடி’

முற்றியதாம் நெல்மணியை,
மொய்க்கவரும் புள்ளினமாய் – நாளும்
தமிழ் கற்கவரும் மாணவரைக் காணலாம்!

முல்லையையே பாக்களாக்கி,
முடிவில்லாத நெடுஞ்சரமாய் – வளர்
திங்களெலாம் மணம்பரப்ப செய்குவான்!

திங்களெலாம் திரண்டுருண்டு,
ஆண்டுகளாய் அவதரித்து – மலர்
வெள்ளிவிழா வேளையினைக் கண்டதாம்!

எங்கள்கவி அண்ணலுக்கும்
ஏற்றமிகுப் பொன்விழா – அகவை
ஐம்பதினைக் கண்டுவிட்ட தனிவிழா!

திங்களெலாம் தமிழ் வளர,
தென்றலென மணம் பரவ – எங்கள்
தங்கமகன் எந்நாளும் வாழியவே!
—0—

எழுகின்ற ஒளியே போற்றி!
விழுகின்ற கதிரே போற்றி!
வழுவாது நாள் பிறக்கும்;
வண்டிசைக்கக் குயில் கூவ,
புன்னகைக்கும் பூமலர்ந்து!
தென்னை ஓலையிலே
அணில் ஓடி விளையாட,
தென்றல் வந்து, முகம் வருட,
சிந்தையதை மகிழ்விக்கும்!
இந்தநாள் இனிய நாள்!
வல்லவன் இறையருளால்
வாழ்வோம் நிறைந்து!
22-05-2021

## எங்கள் தமிழ்!

அமிழ்தினும் இனியதாம்
எங்கள் தமிழ் மொழி!
ஆன்றதோர் பெருமை
கொண்டதுவாம்!
தோன்றிய காலம் தொட்டு,
தொய்வின்றி வாழ்வதுவாம்!
ஈன்றதன் காலம்தன்னை
அறிந்தார் எவரும் உளரோ
சொல்!
மாண்டதோர் பெருமை
கொண்டே மருவின்றி
வாழும் தமிழே!
22-05-2021

## தேடுதலும் ஏனோ!

தேடியலைந்தாலும்; தேடாமலிருந்தாலும்,
வாடியலைந்தாலும்; வாடாமல் நின்றாலும்,
மூடிய விழிக்குள் முகமன் கூறியே,
தேடிநின்றால் தெளிவும் கிடைக்கும்!

வாடா மலருக்கும் வாசம் பிறக்கும்!
தேடாநிலையிலும் தெளிவு கிடைக்கும்!
கூடா மனத்தில் கொள்கைகள் நிறையும்!
சூடா வாழ்வியல் சோதியாய் நிறையும்!
கவிவளவன் 18-05-2021 (6.45AM)

## தக்ஷிண் ஜோதிக்கு!

தெள்ளுதமிழ்போலே
தெவிட்டாத அற்புதமாய்,
சொல்லால் கலையெழுதி
சுவைக்கின்ற அற்புதமாய்,

அள்ளுமோர் இன்பத்தை
அளிக்கின்றார் போல் மனத்தில்,
சொல்லால் எழுதிடவும்
சுடர்கின்ற ஓர் ஒளியாய்,

முத்திங்களுக்கொரு முறையாய்,
மும்மொழியில் கண்டிடுவீர்!
எத்திக்கும் சுடரேந்தும்
இனியதான முயற்சியிது!

மும்மொழி திட்டத்தை
முடியேந்தும் தலைவன் போல்,
முத்தமிழின் திருநாட்டில்,
முடியாகச் செய்துவிட்டீர்!

கத்தும் குயிலோசை
கானகத்து எழிலோசை,
முத்தாகக் கொண்டிடத்தான்
முகிலாளும் காவிரியாள்!

எத்திக்கும் புகழ்மணக்க
எழுந்த திருநாட்டின்,
சொத்தாய் சுங்கக் கூட்டம்,
சுடர்மணியாய்,ஒளியேந்தி,

இத்தரையில் தருகின்ற
இயன்நிலையை வாழ்த்துகின்றேன்!


## தஞ்சை மாவட்டம் பிரிக்கப் பட்டபோது!



கிள்ளச் சிதைந்தது ஓர் அழகு
அள்ளக் குறைந்தது ஓர் மனது
பொன்னிநதியென ஊர்க் கோலம்,
பொங்கும் காவிரியாள் எழிற்கோலம்,

அல்லும் பகலும் அலைமோதும்,
அழகாய் நீரது சுழன்றோடும்!
எழிலாய்க் கோபுரங்கள் நின்றேகும்;
எங்கள் ஊரென்று பேர் சொல்லும்!

தங்கும் அழகெல்லாம் தரணிக்குள்ளே,
தனிமைப் படுத்தியோர் நிலை சொல்லும்!
இனிமை கலைந்தது இன்றங்கு!
ஈன அரசியல் போர்க்கலனாம்;



மோன எழிலைக் கலைத்தெறிந்து,
முடிவில் இரண்டாய்ப் பிரித்திட்டார்!
ஆடியில் பொங்கும் கரை வெள்ளம்,
ஆன்ற எங்களின் நிலை சொல்லும்!

ஈன்ற கன்றினைப் பிரிந்த பசுவுக்கும்,
எழுந்து நின்றதோர் நீதி மன்றம்!
ஆன்ற பெருமையை யார் கொள்வோம்?
அவனியில் எங்களை ஏன் பிரித்தார்?

கோல அரசியல் கோலமென எழில்,
கொஞ்சும் மண்ணை ஏன் சிதைத்தார்?
ஆலகாலமாய் இன்நஞ்சு,
ஆண்டு பலவாய் பரவிடினும்;

ஈண்டு என்மடி தொட்டதினால்,
எழுந்த அழுகைக் கோலமிது! 1992



## யாவும் நிறையும்! 22-03-2021(8AM)

காலமும் கனவும் மனத்தை நிறைக்கும்!
கோலமாய் நின்ற சிறுமைகள் அழியும்!
சீலமாய் வாழ்வின் பெருமைகள் தெரியும்!
ஆலமாய் மனத்தில் அன்பை நிரப்பிடு!
காலமாய் நின்ற கனவுகள் முகிழும்!
பாலமாய் வாழ்வும் புதுமைகள் சூடும்!


## காதலெனும் பூபாளம்! 06-09-1986

மங்கலம் முழங்கிட மங்கையின் பங்கயத்தில்,
மன்னவன் தேரோட்டம் காதல் எனும் பூபாளம்!
கங்கையின் நீரில் இரு காதற்கிளிகள் சங்கமம்!
அங்கையின் விளக்கு அழைத்திடும் விழாக் கோலம்!
எங்கெங்கும் இசைக்கோலம் இளைஞனுக்கு பூபாளம்!
கங்கைக்கு இனி, பங்கம் காதலின் இசைவெள்ளம்!
அங்கென்றும் இங்கென்றும் அடையாத இன்பம் சேரும்!
சங்கமென இன்பம் சூழ சரித்திர வாழ்வு ஏறும்!

பிழை செய்த காலம் என்ன?
விழைகின்றத் தேடல் என்ன?
விளைகின்ற நன்மை என்ன?
கலைகின்ற உண்மை என்ன?
களை செய்த கோலம் என்ன?
வளைகின்ற அறிவோ கூறு!



விளையாடும் விழிமீன்கள் கவிபாட அழைக்கும்!
வளையாடும் கரம்குலுங்கி, பார்வையதைத் திருப்பும்!
தளிராகும் விரல் முகங்கள், இளமையதைக் கூறும்!
குளிராகும் தன்மையதால், நிலவு கூட ஏங்கும்!



## அருணனே! ஈசனே!! போற்றி!போற்றி!!



எழுகின்ற ஒளியுள் நிறைபவனே!
தொழுகின்ற கையுள் அமர்பவனே!
மழுவென மான்யென மாயக்
கதையுள் உறைவோனே!
விழியுள் மூடி வியனுலகம் நோக்க,
புழுவின் விழியிலும் போர்க்குண மனத்திலும்
எழுவோனே! ஊழாய் வினையாய்
ஒவ்வொரு கதையிலும் ஆள்வோனே!
சூழும் மனத்தின் உள்ளொளியே
சுடர் அறிவே வாழி நீ! 09-06-2021

## மனமே நிறைக! 28-05-2021

நல்லன சேரும் தீமைகள் குறையும்!
வல்லமை கூடும் வாய்ப்புகள் பிறக்கும்!
அல்லன மனத்தில் அகற்றி வாழ்வோம்!
தொல்லை என்பதும் மனத்தின் வடிவமே!
தோல்வியைத் தேடும் செயல்நிலை செய்யும்!
இரும்பதும் இறப்பதும் இயன்நிலை ஆகிட,
துன்பம் தழுவி தோல்வியை மணப்பதேன்?
வல்லமனமே அல்லவை நீக்கு!
இல்லையென்றாகும் வாழ்கையின்
இயன்நிலை யறிந்து நிம்மதி நாடு!

## வெண்பா வேந்தர்கள்! 20-06-2021



நாள்தோறும் வெண்பாக்கள்
நலமுடனே படைக்கின்றீர்!
தாள்தாங்கும் நெல்மணியாய்
தமிழ்த்தாயின் மனம்குளிர,

கோள் என்னும் விண்மீன்கள்
குவலயத்தில் அழகூட்டும்!
மீள்பார்வை என்பது போல்
வெண்பாவின் நிலையின்று!
-வேறு-
பேராக வாழ்ந்தவோர் புகழேந்தி,
பின்னாளில், சீராகப் போட்டிவைத்த
கண்ணதாசன்! யாரெழுத வேண்பா
என்ற நாளில், ஊரான மதுரையிலே
ஒரு **பாபாராஜ்!** வேராகும் கோயிற்
குடந்தையிலும் **மோகன்தமிழ்!**

## பாரதிதாசன் 29-04-2021

தமிழே தமிழென்று,
தமிழாய்த்தமிழென்று;
தமிழ்மன்றம் தாம்செய்து,
தமிழர்தம் வாழ்வியலின்
தன்மைகள் சொன்னமகன்!
சின்னச்சாமி பாரதியின்
சீடனாய் நிறைந்திருந்து,
கன்னித்தமிழ் பெருமைகளை
மண்ணில் யாவருக்கும்
கனிவுடனே சொன்னகவி
பாவேந்தன் தனைப்
போற்றுவோமே!

- கவிவளவன்


எழுகின்ற ஒளியே போற்றி!
விழுகின்ற கதிரே போற்றி!
வழுவாது நாள் பிறக்கும்;
வண்டிசைக்கக் குயில் கூவ,
புன்னகைக்கும் பூமலர்ந்து!
தென்னை ஓலையிலே
அணில் ஓடி விளையாட,
தென்றல் வந்து, முகம் வருட,
சிந்தையதை மகிழ்விக்கும்!
**இந்தநாள் இனிய நாள்!**
வல்லவன் இறையருளால்
வாழ்வோம் நிறைந்து!


## அறிவே! கலனே! - 14-07-2021

வாழ்ந்ததும் பொய்யோ!
வாழ்வதும் பொய்யோ!
ஊழ் என்பதும் உண்டோ?
பாழ்பட மனத்தில் பலகதை!
தாழ் இட்ட மனத்தில்,
சூழ் நிலைச் சிந்தைகள்!
வாழ்வுக்கு எல்லையுண்டு!
வாழ்ந்தபின் எல்லையுண்டோ?
ஊழாய் உயிராய்;
உன்னத வளியாய்,
ஆழமாய் மனத்துள்;
ஆளும் நிறையே!
தோழமைத் தந்திடு!
**இந்த நாள் இனிய நாள்!** ம.கீ.பக்-22

## உளம் நோக்கு! 18-06-2021

பலநோக்கு பார்வையதை
உளம் நோக்க வேண்டும்!
தாளாத செல்வங்கள்
சதிராட வைத்தாலும்,
மூளாத இன்பங்கள்
முகிழ்ந்தே எழுந்தாலும்,
கேளாத செவிதன்னில்;
கிளர்ந்தெழுமோ இன்பங்கள்?
தாளாத செல்வங்கள்
தந்தேயவன் வைத்தாலும்,
வாளாக துன்பங்கள்
ஒருநாள் வரவே தான் செய்யும்!
கோளாகத்தான் நிறையும்,
அந்தக் கோபாலன் தனைத்தேட,
வல்வினைகள் நீங்கிவிட
வளத்துடனே வாழ்திடலாம்!
- கவிவளவன் (8 AM)





## உடுமலைப் பேட்டை!

உடுமலை என்றது நினைவில் வரும்,
உடலை வருடும் நறுங் காற்றேதான்!
அடமாய் வந்தே நம்மை ஆர்பரிக்கும்,
கடலாம் **நாராயணக் கவி** தானே!
தடமாய் நிறைந்த இயற்கை வளம்!
வடமாய்ச் சுற்றிலும் மலைகளுண்டு!
விடையாய் அருகே அணைகளுண்டு!
படமாய் மனதில் பதிந்து கொள்ள,
திடந்தோள் நண்பன் **தாஹிர் பாஷா!**
அடுத்து உறவினால்**இராஜ சேகரே!**

## முதுமை! 30-07-2017

கிள்ளை மனமாய் அள்ளியே உண்டு,
வெள்ளை மனமாய் விரும்பியதைச் சொல்லி,
பிள்ளைதன்னை பிரியமாய் தேடி,
துள்ளும் மனமாய், துயரம் நீங்கி,
கொள்ளும் வாழ்வே, குவலயம் தன்னில்,
அள்ளும் இறைமையின், ஆனந்தக் கூடம்!

விழிநீரில் முகம்துடைத்து,
வேதனைகள் தானெழுதும்;
பழிகாணும் உறவுநிலை
பாரினில் தானெதற்கு?
இழிநிலையாய் மனமிருந்தால்,
யாவருமே தீயவர்தாம்!
முழுநிலவை களங்கமாக்கும்
மூடர்தம் உறவெதற்கு?
27-06-2021

## எல்லைதான் எதுவோ!

பூநாறும் பூத உடல் நாறும்!
மானானவிழியழகும் மங்கும்!
கோன்யாரோ குவித்த உடல்,
தான் எனவாய்த் தள்ளாடும்!
வான்சேரும் நாள் என்பர்!
தான் மேவிய வழியென்பார்!
கோனாகி நமையெல்லாம்,
கூத்தாட்டுவான் தான் யாரோ!
அவனோ! அவளோ! அதுவோ!
எதுவாய் இருந்தும் என்ன?
பதுமையாய் ஆட்டும் நிலையோ!
புதுமையாய் நாமும் பொங்கி எழ,
பூதலக்கணக்கில் நாமுமோர்நாள்,
புலனின்றிப் போக யாவும் நிறையும்!
புண்ணிய பாவமாய் புதுவழி சொல்வர்!
எல்லைதான் எதுவோ இயம்பிடுவீரோ?
- *கவிவளவன்* 27-07-2021 (8.20AM)

## கூடுக மனம்!

இறத்தலும், பிறத்தலும்,
மண்ணில்;
இயன்நிலை யாகும்!
உயிர்வழி சிதைத்தே;
உயிர்கள்,
உண்ணலும் வேண்டும்!
இறத்தலை நினையா,
இயன்நிலை
வாழ்வாய் மனத்தில் கூடும்!
இந்தநாள்,இனியநாள்;
என்றே,
இயன் நிலை தேடுவோம்!
இன்பமாய்க் காலம்;
நகர்ந்திட,

இனியதாய் வாழ்வோம்!
**கவிவளவன் ம.கி. பக் 19**
**14-07-2021 (6.40 AM)**

## மனமே தேடு!

வாழ்ந்ததும் பொய்யோ?
வாழ்வதும் பொய்யோ?
ஊழ் என்பதும் உண்டோ?
பாழ்பட மனத்தில் பலகதை!

தாழ் இட்ட மனத்தில்,
சூழ் நிலைச் சிந்தைகள்!
வாழ்வதற்கு எல்லையுண்டு!
வாழ்ந்தபின் எல்லையுண்டோ?

ஊழாய் நிலையாய்,
உன்னத வடிவாய்,
உயிராய் மனமாய்,
உன்னத வளியாய்,

ஆழமாய் மனதுள்,
ஆளும் நிறையே!
தோழமைத் தந்திடு!
தோள்வலி எதற்கு?
வாழ்வியல் வழியைக் கூறு!
**கவிவளவன் 14-07-2021**
**(11.15 PM) ம.கி. பக் 20**

## நாட்குறிப்பு! 15-02-2006 (12.30 AM)

# கனவுகளோடு நிகழ்வுகளைக்
கணக்குப் பார்த்துக் கொள்வதற்கான,
கையேடு இது!

# நிகழ்தலை நிறுத்துப் பார்க்கும்;
நேற்றைய நிகழ்வுகளை,
நாளை அசைபோட வைக்கும்!

# உள்ளத்தின் திறவுகோல்,
உணர்ச்சிகளின் வெளிப்பாடு!
மனத்திரையின் தனிக் கண்ணாடி!
அகழ்ந்தாய்வு போல்,
அடுத்த தலை முறைக்கும் செய்தி
சொல்லும்!

# நாயகர்களின் ஊன்று கோலாய்,
வரலாற்றுப் பதிவுகளில் நடம் புரியும்!
தேடல்களும், ஊடல்களும்,
மனத்தோடு,

## கற்போம்! கற்பிப்போம்!!

கற்றதைக் கற்றவர் மற்றவர்
கற்றிடச் செய்திடும் செயலே,
நற்குணம் நிறைந்து நாளும்;
அற்புத வாழ்வியல் நெறியை,
கொற்றமாய் குவலயம் தன்னில்,
சொற்சுவைத் தமிழால் அளந்து,
பெற்றிட நிறைக்கும் அறமே!
பொற்குடம் போலே அறிவைத்
மற்றவர்க் களிக்கும் மருவிலா
நற்றவம் பேணுவோர் வாழ்க!
08-09-2021

அறிவெல்லாம் பிழன்றதுவோ!
ஆற்றல்தான் சிதைந்ததுவோ!
ஊற்றாக உள்மனம் தானும்
உதிர்ப்பதெல்லாம் உவப்பாமோ!
பெற்றாகும் பலநிலைகள்
பேதமைதான் செய்திடுமோ?
முற்றாக ஒருநாளில் மண்ணில்,
மூடன் என்றே பெயர் வருமோ?
ஆற்றா மதியின் ஆன்ற வடிவே!
மண்ணில் யாவும் மடிவதேனோ!?
19-07-2021 -- 09-30 AM

## நீந்தும் நினவுகள்!

உறங்கும் விழியுள்,
உறங்கா நினைவுகள்!
கிறங்கும் வாழ்வின்,
மயக்குறு நிலைகள்!

பறக்கும் நிலையில்,
பட்டாம் பூச்சிகளாய்!
திறக்கும் அறிவில்,
திண்மை இருந்தால்,

உறக்கம் கலைந்து,
பிறக்கும் போழுது,
பிறக்கும் போதே
பேரின்பமாகும்!
**கவிவளவன்**
05-12-2021 (05.05 AM)

## குடந்தை மோகனுக்கு! 19-07-2021 (05-55AM)

அன்னை தமிழுக்குப் பிள்ளைதமிழ் பாடிடும்,
குன்றா மணிவிளக்கே கோவே குடந்தைப்
பொன்னகரில் பூத்த தமிழமுதே சீர்மேவ,
என்நாளும் வாழ்க இனிது!

## முகிழும் முதுமை!

உள்ளம் விழுமிய உணர்வுகளை மனம்,
கள்ளமின்றி அசைபோடும்
காலம் அதுவே முதுமை யென்போம்!
அள்ளக் குறையா ஆனந்தம்
ஆன்ற வாழ்வின் பயன் சொல்லும்!
வள்ளல் போலே மனமதுவும்
வாரிக்கொள்ளும் நினைவுகளை!
கிள்ளையாய் நின்ற காலமதும்,
கிளர்ந்து எழுந்த உள்ளத்து,
இளமை காட்டிய நினைவுகளும்
முகவரி தன்னை தான் புரட்டி,
மனம் கூட்டி மணமாக்கும்!
01-12-2022 (11 PM)

## நலமாய் வாழ! (07.30 AM) 15-07-2021

அறிவும் ஆற்றலும் அள்ளித் தருகின்ற
இயற்கையின் வழியே இறைவன் ஆகும்!
செறிவாய்ப் பலவும் செய்து வைத்தும்,
அறிவால் தானே ஆள்வதாய் நினைத்து
தீவினை தன்னில் தோய்ந்து எழுந்து,
இயற்கையைத் திட்டி, இயன்நிலை மறந்து;
ஒவ்வொரு நாளும் குமைந்து ஓயும்
மானிடர்க் கெல்லாம், உண்மை அறிய;
ஒளியாய் ஒலியாய் நிறைந்த பொருளே!
இயன்நிலை கூறி, இன்னலை அகற்று!
**- கவிவளவன்** (தே.க. பக்-17)

### *சினிமா சினிமா!*

கனவுகள் சுமந்து கற்பனை நிறைந்து,
காலார நடப்பவர் நினைப்பது சினிமா!
மனத்தின் சுமையைக் களைந்திட நினைத்து,
மக்கள் காண்பதும் அந்த சினிமாதானே!

சினிமா இங்கே சிங்காதனத்தின் முகவரியாக,
அணியாய் பலரும் அணிந்திடத் துடித்தே,
அணைக்க நினைக்கும் அரசியல் களமோ,
அரை நூறாண்டு மேலாய் சினிமா வழியே!

ஆகலின் யாவரும் அணைந்திட நினைப்பது,
சினிமா என்னும் கனவுத் தொழிற்சாலை!
பணமும் பொருளும் பதவிக் கலனும்,
அளிப்பது சினிமா அன்றி வேறுண்டோ?
*கவிஞர் கவிவளவன்* 25-03-2022 (02.50 PM)

### *சினிமா சினிமா!*

சிந்தையை மயக்கும் சினிமா சினிமா!
அந்தரம் மிதந்து அவனியில் நிலைக்க,
தந்திரம் பலவும் கற்றிடல் வேண்டும்!
எந்திரம் போலும் உழைத்திடல் வேண்டும்!

மந்திரம் போலே முன்னிலை அறிந்து,
சிந்தையை இருத்திச் செயல் பட வேண்டும்!
கந்தலும் பேசும் கடவுளைப் போலே!
சிந்தையை அறிவை ஒதுக்கி வைத்தே,

எந்திரம் போலே ஓடிட ஒருநாள்,
அந்தரம் மிதக்கும் ஆளுமை கிட்டும்!
கந்தல் வந்து கால்தொட்டு நிற்கும்!
முந்தைய நிலைமாறி, முகவரியும் மாறும்!
*கவிஞர் கவிவளவன்*
24-03-2022 (11.45 PM)

### *அறிவே என்னை ஆளாதே!*

சிந்தையே என்னைச் செதுக்காதே!
சிதிலமாவது நாளும் என்மனமே!
விதியென்பதும் ஓர் உண்மையதோ!
விவரிக்கும் மனமோ வெருண்டோடும்!
தவறை செய்யாது தான் வருந்தி,
அவசரமாகவும் மனம் வெதும்பி,
ஆளும் உலகியல் அறியாது,
கலங்கும் மனத்தை நான் பெறவே,
காலம் என்னை வழிநடத்தும்!
விளங்காப் பொருளாய் சிந்தையே,
விரும்பி அணைத்திட வேண்டுவனே!
அருளாய் என்னையும் ஆளும் கண்ணனே!
*கவிவளவன்* 26-03-2022 (10.10 PM)

## *புத்தகத் திருநாள்!*

நூல் பல கல்!
நூலைப் படி, தமிழ் நூலைப் படி!
நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை!
கற்றோரும் நூலோரே!
உற்றதாம் கல்வியின் அறிவைத் தருவதும் நூலே!
தைப்பதும் நூலே,
இணைத்துத் தைப்பதும் நூலே!
பூச்சிகள் உமிழ்நீர் காய்ந்து,
சுவற்றில் ஆடுதல் காண்பர்,
நூலாம் படை என்பர்!

சுவற்றின் சித்திரம்,
செதுக்கிய படிமம்,
ஓலையின் சுவடிகள்,
இன்றோ வண்ணக் காகிதம்!

எல்லா வளர்ச்சியும்,
அறிவின் நுகர்வை அளித்து நிறையும்!
நூலோர் அறிவே,
நிறைக்கும் கலனாம்!
புத்தகம் போற்றி அறிவைச் செய்வோம்!
*கவிவளவன்* 23-04-2022

### *பாட்டிமார் தினம்!*

அன்னைக்கும் தந்தைக்கும் விழாவென்றார்!
அடுத்து காதலுக்கும் ஒரு தினம் என்றார்!
நீருக்கும் விழா என்பார் நெருப்புக்கும் என்பார்!
தாத்தனுக்கும் பாட்டிக்கும் விழா வென்பார்!

மண்ணகத்தில் வாழ்வதற்கும் வீழ்வதற்கும்,
வீறு கொண்டு எழுவதற்கும் விழா என்றால்,
நோய் கொண்டு போகையிலும் மண்ணில்,
நொடித்து வீழ்கையிலும் விழா வென்பார்!

வகைதொகை அறியாது வாழ்ந்துவிட்டு,
சிகை அலங்காரமும் சிதிலமாகும் நிலையாகி,
பகை கொண்டு உள்ளத்துள் போரிட்டு,
தகைவின்றி வாழ்வதிலே என்ன பயன்?
*கவிவளவன்* 23-03-2022 (12.50 PM)

முற்றாக் கனவுகளில் மோதித் திளைக்காமல்,
பற்றாக உள்ளத்தைப் பக்குவம் செய்வித்து;
ஆற்றலால் நல்லறிவு ஆளுமைச் செய்திட,
ஏற்ற கவிதை எழுது! 06-07-2021 (தே.க. பக்-18)

முற்றாக வெண்பாவில் முன்னெடுக்கும் சிந்தையைப்
பற்றான அறிவால் பகுத்துச் சீர்மேவ
கற்றாரும் காமுறவே வெண்பா படைக்கும்
நற்றமிழே வாழ்க நிறைந்து!13-07-2021(தே.க. பக்-18)

**மனிதா எழுந்திரு!**(ம.கீ பக்-30)
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை!
குனிந்து நோக்கில் சீற்றம் இல்லை!
மற்றவர் குறையை முகண்டு தூக்கி,
நெற்றிவரையில் நிமிர்த்தி வைத்து,

ஆகாவென்று அலறும் கூட்டம்,
இல்லாதொன்றை ஏற்றித் திட்டும்!
இருக்கும் ஒன்றைக் காணாதிருக்கும்!
இயன்நிலை அறிவோ இல்லையது,

இழிநிலை மனத்தின் நிலையோ!
யாரோ எவரோ என்பது இன்றி,
தவறைச் சுட்டும் தன்மைவேண்டும்!
காணாதிருக்கும் தன்மை யாயின்,

கவலையில்லை என்றுகொள்வோம்!
ஒன்றை விட்டு ஒன்றைச் சாடி,
உதாவக்கரைக்கு கூக்குரலிடுதல்,
உன்னதமாகுமோ? உலகோர் சொல்க!
*கவிவளவன்* 21-03-2022 (10.30 AM)

***மருத்துவர் நாள்!***
உவகை என்பதே உள்ளத்தின் மருந்து!
உவர்ப்பும் உயிர்ப்பும் உணவில் வேண்டும்!
தவமாய் வாழ்வின் தடத்தை அறிந்திடில்,
இயல்பும் நிலையும் இயைந்தே தொடரும்!

தேவையறிந்து தெளிவாய் வாழ்ந்திடில்,
தீராவினைகள் ஏதும் நம்மிடம் சேராதிருக்கும்!
பொலிந்த அறிவின் புரியா நிலையில்,
வலிந்து சேரும் தீயுடல் கெடுதிகள்!

நலிந்து நாமும் மனத்தால் சோராமல்,
பொலிந்த அறிவைத் தெளிவாய்ச் செய்து,
மருத்துவம் காண மருத்துவர் தேடி,
மருந்து உண்டு மகிழ்வை அடைவோம்!

துடிப்பாய் நம்முடன் துணையாய் நிறைந்து,
எடுத்து தொடுக்கும் ஒவ்வொரு சொல்லிலும்,
அடுத்து நம்மை ஆற்றுப் படுத்தும்,
மருத்துவர் தம்மை மகிழ்வாய் ஏற்றுவோம்!

மருத்துவர் நாளில் மகிழ்ந்தே போற்றுவோம்!
இருக்கும் இயன்நிலை அறிந்தே வாழ்வோம்!
எல்லா நிலையிலும் பெருமை அடைவோம்!
எல்லா துன்பமும் இல்லாதொழிந்திடும்!
*கவிவளவன்* 01-07-2022 (10.15 ஏ.எம்)

***கோடை மழை!***
கோடையில் மழை வந்தால்,
கொப்பளிக்கும் மண்தானே!
வாடையின் குளிரைப் போல்,
வசந்தமாய் தென்றல் வரும்!
ஆயினுமே கோடை மழை,
அற்புதச் செல்வ மன்றோ!
***கவிவளவன்*** 11-04-2022
(10.25 பி.எம்.)

**மஞ்சப்பை!**
பள்ளிப் பருவத்தில்,
பலவீட்டுப் பிள்ளைகட்கு;
புத்தகம் சுமக்கும்,
துணிக்ககடை உபயம்!
தோளில் சுமக்க,
கைவிரல் தாங்கும்!
சில்லரைச் சாமான்கள்,
இல்லத்தில் சேர்க்கும்!
திருமணத் தாம்பூலம்
திகழ்த்தும் நினைவில்!
தாத்தாக்கள் சிலரின்,
தாம்பூலம் சுமக்கும்;
வெற்றிலைச் செல்லம்!
- **கவிவளவன் 28-12-2021**

**அறிவின் சீற்றம்..!***
கூறு கெட்ட மனிதருக்காய் என்றும்
நான் கோலமிடுவதில்லை!
மாறுபட்ட சிந்தனைகள் மண்ணில்
என்றும் வாழ்தல் வேண்டும்!
தாறுமாறாய் வாழ்பவரின்
வழக்கதுவும் என்றுதான் மாறும்?
நூறுகதை சொன்னாலும்
நூலறுத்து பட்டம் விடுமந்த
கூறுகெட்ட மனிதரை நாம்
என்ன செய்ய இயலும்?
ஆறுபோகும் வழியறிந்தும்
எதிர்நீச்சல் போவதேனோ?
கூறு கெட்ட மாந்தருக்கு
கொள்கைதான் எதுவும் உண்டோ?
மாறுகின்ற அந்த உலகியலை;
மருவின்றி நாமும் கேட்டிடுவோம்!

கலவையாய் மனத்தில்,
நாளும் குமுறும் சிந்தையே,
நிலைவை மறந்த பூமி!
நீந்த முடியாத தோணி!
அழகைத் தேடும் குயில்கள்;
அலறலாய் அகவும் மயில்கள்!
20-07-2022 (07.10 AM)

**காமராஜர்!**
எட்டாக்கனியாய் நின்ற கல்விதன்னை,
கட்டனமின்றியே காட்சிப் படுத்தினார்.
முட்டாள் என்ற கூட்டமும் முன்னேற,
எட்டுதிக்கும் செயல் படுத்திய காமராஜர்!
திட்டவீரன் நினைவைப் போற்றுவோம்.!
- **கவிவளவன்** 02-10-2022

முற்றாக வெண்பாவில் முன்னெடுக்கும் சிந்தையைப்
பற்றி அறிவால் பகுத்துச் சிறப்பாக
கற்றாரும் காமுறவே வெண்பா படைக்கும்சீர்
நற்றமிழே வாழ்க நிறைந்து!

நெருப்பென குவித்தேன் நீரென அணைத்தேன்!
கருப்பொருள் இன்றிக் கவிதையில் நுழைந்தேன்!
விருப்புகள் விலக்கி, வேதனைத் தொலைத்து,
மருவில்லா வாழ்வாய் மகத்துவம் தேடிட,
அருளாய் மனமாய் அவனை நினைத்தேன்!
திருவாய்த் தெரிந்திட தோல்விகள் மறைந்திட,
உருவாய் நிறைந்து, உணர்வில் கலந்திட்ட,
பரம்பொருள் என்றதைப் பக்குவம் செய்திட,
ஒரு மனம் இருந்து, ஒரு மனம் பிறக்கும்,
தருவாம் வாழ்வியல் தகர்த்தலும் ஏனோ?
20-02-2022 ( .07.00 AM) [KPA Poems]

*காந்தி மகான்!* 02-10-2022

சத்தியத்தின் வழிநடந்த காந்தி மகான்,
வித்தையாக பலவற்றை செய்து வாழ்ந்தார்!
தத்துவமாய்ப் பெண்ணடிமை தீர்க்க நின்றார்!
முத்தாகத் தீண்டாமை வேண்டாம் என்றார்!
வித்தகராம் மாமனிதர் பிறந்தநாள் இன்று!
எத்திக்கும் அவர் புகழை ஏற்றி வைப்போம்!

*வேண்டுவேன் யான்!*

தேடாத வாழ்க்கை இது தேடியேன் வந்ததுவோ?
பாடாத தேனியாய் நான் பறக்கின்றேன் மண்மீதில்!
கூடாத நட்புடனே நான் கூடிக் களிக்கவில்லை!
சூடாத மலர்மங்கை சூடும் என்றன் மலர் மார்பா!

வாடாத மனந்தன்னை வகையாகத் தாராயோ!
மாட மாளிகை யோடு, யான் பொன் வேண்டேன்!
நாடாத உறவுக்கும் நலம் செய்யும் மனமுண்டு!
தேடாத உறவுக்கும் திகட்டாமல் செய்திடுவேன்!
அழகான மலர்த்தோட்டம் அசைகின்ற கொடியழகு!
எழிலான யாவிலுமே இறையே உனைக் கண்டேன்!
பழிசொல்லும் மனத்துடனே யான் பழக வேண்டாம்!
அழகிலே உனையன்றி ஆன்ற பொருளுண்டோ!

அச்சுதா! அனந்தனே! அமரர் ஏறே ஆனந்தக் கடலே!
எச்சுவையும் மண்ணில் இனி யான் வேண்டேன்!
அச்சுவையே நீயன்றி வேறேது அரங்க நாதா!
மச்சமாய்ப் பிறந்தாயோ கருணையே என் கண்ணனே!
*கவிவளவன்* 13-07-2022 (10.45 பி.எம்)

மரமே! உயிரே!!

மண்ணில் விழுந்து மரமாய் முளைத்து,
தன்னலமின்றி உலகைக் காக்க;
மழையைக் கொடுக்கும் மேகத்தை நிரப்பி!
மலையருவி மடுவில் வளர்ந்து;
மண்பதை யாவும் உயிருடன் வாழ,
மாசுக்காற்றை உள்ளே இழுத்து;
மருவின்றி உயிர்க் காற்றினை வழங்கும்,
மரமே மக்களின் உயிரே!

*அம்மையே போற்றி போற்றி!*

தேடியப் பெருநிதியாய், தெய்வத்தின் ஒரு வடிவாய்,
ஆடிவரும் காவிரியின் நீர்கொள்ளும் சிற்றூரில்,
கூடிய உறவினர்கள் கொண்டாடும் நன்மகளாய்,
வாடிய மனங்களுக்கு வகுத்தே நலம் செய்து,

மூடிய விழிக்குள்ளும் முகமன் செய்வாளை,
ஆடியின் நாயகியை அழகான பெருமகளை,
சூடியப் பெயரதுவாம் முத்துமாரி யென்றே!
நாடுவார் நலம்சூல நல்ல நாள் பார்த்து,

கூடிய திருப்பணியும் குறைவின்றி நடந்திடுக!
தேடிய நன்நிதியாய், திரண்ட அருட்சுடராய்,
நாடியோரை நலம் தன்னை காத்திடுவாள்;
வடக்காலத்தூர் முத்துமாரிஅம்மையே!
17-07-2022 (12.15PM)
- கவிஞர் கவிவளவன்.

*குறுகுறு மனமே!* (ம.கீ. பக் - 32)

வளவள வென்று, பேசிக் கழித்தது,
சிடுசிடு வென்று சொற்களைக் குவித்து,
சடசட வென்றே பேசித் திரிவர்!
படபடவென்று மனதும் சரியும்!

சலசல வென்ற நீரின் ஓசை,
கலகல வென்ற குழந்தைகள் ஆட்டம்,
மளமள வென்று சரியும் மனத்தில்,
தடதட வென்று ஓசை யெழுப்ப,

கடகட வென்று நிறையும் மனது!
தடதட வென்ற தடுமாற்றம் நீங்கும்!
மளமள வென்றே மகிழ்ந்து எழும்!
கலகல வென்றே பொழுதை நகர்த்தும்!
*கவிவளவன்* 20-07-2022 (07.10 AM)

*காணும் பொங்கல்!*

கன்னியர் கூடிச் சூடும் பொங்கல்!
காளையர் கூட்டம் தேடும் பொங்கல்!
மன்னிய வழக்காய்த் தமிழன் செய்து,
சேர்ந்து நிறைந்து; சிந்தையில் மகிழ்ந்து,
உறவுகள் கூடி உன்னத மாக,
ஆடியும் பாடியும் அகம்மகிழ்ந்திட்டக்,
அந்தக் காலத்தைச் சொல்லி மகிழும்,
வாழ்வியல் நெறியோ வழக்கில் இல்லை!
ஆற்றங்கரையில் அழகுடன் நிகழ்ந்தது,
இன்று பீச்சு மணலின் சுண்டலைத் தேடும்!
காலம் தோறும் ஆகிய நிலையே,
மாறியதாம் இன்றைய நிலையில்!
*உழவர் திருநாள்!* என்றே நாமும்,
ஓங்கிச் சொல்லியே மகிழ்ந்து கொள்வோம்!
17-01-2023

***ஆதாரம் தான் தருவாய் இறைவா!***

ஆதாரம் வேண்டும் என்றால்,
　　***ஆதார்*** வேண்டும் என்பார்!
சேதாரம் அதில் இல்லை என்பார்,
　　சீக்கிரமாய் முடியும் வேலை என்பார்!
சூதாகச் செய்வோரும் வேலை,
　　தான் செய்கின்றார் நாளும்!
தீதாக முடிந்தக்கால் இங்கு,
　　தீமையடைந்தோரை என்செய்ய?

ஆதிமுதல் அந்தமென மண்ணில்
　　ஆன்ற சரித்திரமும் அதில்காண்பர்!
மீதமிலாப் பெருவழக்காய் நாளும்
　　பேசித்திரிவார் ஒட்டியும் வெட்டியும்!
காதாலே கேட்டு விட்டு இங்கே
　　காணாமல் பொவாரே பலரும்!
ஆதலால் பாதுகாப்பை ஆண்டவனிடம்
　　அளிப்போம்; மதம் செய்யாது!

***கவிவளவன்*** 03-12-2022 (11.10 PM)

**தமிழும் வாழ்க!**

தமிழென்றன் மொழியென்று;
தகைவுடனே சொல்வதற்கு,
அமிழ்தனைய அதன் நிலையை,
அளவிட்டுப் பார்த்தேனோ!

இனியதே மொழியென்று,
இயம்பி நாம் நின்றாலும்,
தனியதாய் அதன் பெருமை,
தன்மையதை அறிவேனோ!

மரபுவழி பெயரிட்ட,
மாண்புடைய மொழியன்றோ!
அரியதாய் நிறையும்;
அது கொள்ளும் இலக்கண நிலைகள்!

ஆதியாய் நிற்கும்,
தொல்காப்பியம் தானும்,
அழுந்தவேச் சுட்டும்,
மொழியின் அழகை!

வாழும் வழி சொல்லும்,
பொருள் இலக்கணம்!
வகையாய் நிறைந்த,
சொற்பிறப்பியல்!

இப்படிப் பலவாய்,
தனித்த சிறப்புடன்,
தவழும் தமிழே!
வாழிய நிறைந்து!!

**கவிவளவன்** 21-02-2022

***அடியறியாப் பிள்ளை!***

அடியடியாய் அடிவாங்கி நின்றதொரு காலம்!
பிடிவாதம் என்ற பெயர் கண்டதொரு காலம்!
முடிவின்றிப் பிள்ளைகளை முயங்கிப் பெற்றாரே!
அடியொற்றி நிற்பதற்கு ஒன்றோ இரண்டோ!

அடுத்து பெறாமல் கொண்டோம் வாழ்வே!
கடிவாளம் கொண்டு கனன்று திட்டாமல்,
பிடிவாதம் தனைக் கேட்டும் பிணங்காமல்,
அடிதொட்டு அவருள்ளம் நிற்பவர் நாமே!

மடிதாங்கி நாம்வளர்த்தால் அடியங்கு ஏது?
முடிசூடும் பிள்ளைதாமும் என்னாளுமே!
மடிதாங்கிக் கொஞ்ச அத்தையுண்டு அங்கு,
பிடித்தழைத்து அணைத்திடவே சித்தப்பா ஏது?

பிள்ளைக்கு மாமனென்றால் சித்தியவள் இல்லை!
அள்ளுமின்ப சித்தியுண்டு மாமனில்லை எங்கும்!
துள்ளியாடும் தெருவினூடே பிள்ளைகளே இல்லை!
எள்ளளவும் ஒட்டாத இதையத்தோடு வளர்வர்!

எப்போதும் கைபேசி தனில் விளையாடி களிப்பர்!
தப்பாது உலகநிலை தான் அறிய விழையார்!
தப்பாது ஒப்ப வேண்டும் இன்றைய தாய் தந்தை,
ஒப்பாதும் செய்கின்ற பெருந்தவறு தானென்றே!

***கவிவளவன்*** 11-12-2022 (11.55 AM)

***பார்* அதி *அவன்!***

பட்டையை கிளப்பிய, சீர்மிகு
எட்டயபுரத்து பாவலன் தானும்,
மக்களைத் தட்டி யெழுப்பியபின்
தரணியைத் துறந்த நூறாண்டுகள்!
கொட்டியவன் முழக்கிய பின் வந்த
கவிஞர் மனத்தில் கொள்கை ஆயினன்!
பட்டாய் அவனை நினைந்து போற்றி,
பிறந்தநாளில் பெருமை கொள்வோம்!
சுட்டும் விழிச்சுடராய் தமிழ் கண்ட
சீராளன் *பாரதி* எந்நாளும் வாழியவே!

- ***கவிவளவன்*** 11-12-2021 (05.30 PM)

சிந்தை செம்மையாகில்
செயல்களும் செம்மையாகும்!
இருப்பதும் இயன்நிலை
இறப்பதும் இயன்நிலை!
இறைவன் என்றவன் இருந்தாலும்,
இல்லாது உலகை ஆண்டாலும்;
வாழ்வின் பயனே மனமாகும்!
[23/04/2021, 8:04 pm]

## ஒய்வூதியர் நாள் 17-12-2022

பணிநிறைவு கண்டாரும் பாங்குடனே வாழ்வதற்கு,
அணியாக ஒருநிலையை அரசும் செய்ததுவே!
இணையோடு மகிழ்ந்திருந்து, இனிதாய் வாழ்ந்திடவே!
கணையாகப் பலரும் தொடுத்து நின்றதினால்,

அணியல்ல என்றதனை அரசும் மாற்றியதோ?
துணையாக யாவருக்கும் தொடங்கியதே தேசியநிதி!
அணியதுவோ அல்லவோ பயனரே தானறிவர்!
இனியதாய் எது வுண்டு? இனியதே ஆகுமோ?

பணிநிறைவு கண்டாரைப் பாங்குடனே அணைத்தேகி,
அணிசெய்து குழுமத்தை ஆக்கிய சீர் கலியன்வாழ்க!
மணியாக நம்நினைவை மறுபடியும் அசைபோட,
இனிதாகும் இக்குழுமம் விழுதுகள் என்பதாமே!

கு.ப.அசோகன், 17-12-2022

## துள்ளும் மனம் கொள்வாய்!

உள்ளத்தில் அழுக்கிருந்தால் உதட்டிலே பொய்பிறக்கும்!
கள்ளமில் உள்ளந்தான் கடவுளையும் காட்டித்தரும்!
பள்ளந்தான் மேட்டின்நிலை பக்குவமாய்த் தெரிவிக்கும்!
துள்ளும் மனமென்றும் தோல்வியைத் தழுவாது!

## மனம் தேடும் வினாக்கள்!

மாயை யென்றே மனம் பதிப்பித்தால்,
வைணவம் என்றே வகைப் படுத்தலாம்!
அறிவின் தேடலாய் அனுமானிதால்,
சைவத்தின் சாரலாய் உள்ளே நோக்கலாம்!

காலம் பதித்த வரையறை யாவும்,
கோலம் இட்டு கொள்கை எனவாய்,
ஆலம் விழுதில் ஆடும் குருவியாய்,
பாலம் இட்டு பலவும் சொல்லி,

இந்து மதமாய் இயம்பும் போழ்தில்,
சொந்த அறிவும் சிதைந்து போக,
மந்தமாய் மனமும் தேடலில் நிறையும்!
அந்தரம் மிதக்க அறிவைச் செய்தால்,

நின்றவை நினைப்பவை யாவும் தெளியும்!
குன்னிலிலும் இல்லை குடிலிலும் இல்லை!
என்றும் நிரைந்த பரம்பொருள் ஒன்றே!
அன்றும் என்றும் அதுவே ஆற்றலாம்!

மாற்றமில் வாழ்க்கையை மகிழ்ந்து அணைத்து,
தோற்றப் பொலிவினைத் தொலைவில் நிறுத்தி,
ஏற்றம் கொள்ளும் எண்ணம் தன்னில்,
காற்றாய் நிறையும் அறிவே காட்சி படுத்தும்!

- கவிவளவன் 17-02-2023 (11.55 ஏ.எம்)

## தமிழை மறவோமே!

எங்குதிரிஞ்சாலும் இந்தி கேட்கும்!
எல்லா தொழிலாளியும் இந்தி பேசும்!
அங்கே இங்கே கொஞ்சம் ஒரியாவே!
ஆனாலும் எங்கினும் இந்தியாச்சு!

அங்கொன்றும் இங்கொன்றும் பெங்காலி,
அவராலே ஏதும் நமக்குத் துன்பமில்லை!
ஐந்து மணிக்குக் கடைவெளியில்,
அதிகாரமாக இந்தியைப் பேசிடுவார்!

கடைக்காரரும் கொஞ்சம் கஷ்டப்பட்டு,
கேட்டதைக் கொடுத்து மகிழ்ந்திடுவார்!
எல்லா இடமும் இந்தி என்போம்!
துள்ளியாடுவார் அவர் மண்ணெனவாய்!

தள்ளி வைத்தே நமைப் பார்ப்பார்!
இந்தியா தங்கள் தேசமென்றே!
உண்டிச் சாலை முதலாய் யாவிலும்,
கண்டிடலாம் அவரைப் பணியினிலே!

வானுயர்ந்த கடைகளிலும் அவரே!
வங்கி,ரயில்வே பணியிலும் அவரே!
தொங்கிநாம் சேவை பெறவேண்டும்!
தொடர்ந்திட்டால் நமக்கு இடமில்லை!

தமிழையும் இனி நாம் மறப்போம்,
தலைமையில் அவரே இனி இருப்பார்!
மாற்றாரையும் நாம்மதித்திடுவோம்!
மருவின்றி நம் மரபையும் காத்திடுவோம்!
13-02-2023 (12.15 PM)

## *சுப்பிரமணிய பாரதி பிறந்தநாள்!*

பாரதி என்றொரு மாகவிஞன்
மண்ணில் உதித்த நாளின்று
எட்டயபுரத்து செல்வனவன்,
எவர்க்கும் உரிய தமிழ்மகனாம்!

சொற்திறம் நிரம்ப பா சமைத்தான்,
சோதனை யாவையும் வென்றிடவே!
அறிவால் யாவையும் ஆட்டுவித்தான்!
ஆன்ற அன்பைக் காட்டி நின்றான்!

உயிர்கள் யாவும் ஒன்றென்றான்,
உண்மை அறிவை உணர்ந்திட்டான்!
நன்மகன் நினைவை போற்றிடுவோம்!
நானிலம் போற்ற வாழ்ந்திடுவோம்!

*கவிவளவன்* 11-12-2022 (10.55AM)

## மறந்த மணம்!

வாழை மடல் வரிசையிட,
தென்னங்கீற்று தாலாட்ட,
கரும்பின் தோகை சலசலக்க,
பனை யோலை காற்றில் படபடக்க,
தாளசைந்து நெல் மணி ஆடும்!

ஆலம் விழுதில் குருவிகள் ஆடிக் களிக்க,
இலைகள் கூட்டும் இனிய ஓசை!
தாழை மடல் விரிய பூக்களின் வாசம்!

தாமரை இலைகள் நீரைத் தொடாமல்,
பூக்களை விரிக்க, அல்லிக் கொடிகள்,
அசைந்தாடி நீரில் புறளும்!
மீனைத் தேடி மீன்கொத்தி,
அலகால் கிழிக்கும்!

இலுப்பைத் தோப்பின் இதழ் வாசம்!
புளியந்தோப்பின் பூவாசம்!
வாழை தோட்டத்தில் பால் வாசம்!
-கவிவளவன். 22-05-2023
(இரவு 10.35) (பல மொழிகளில், இலை எனும் பொருள் படும்படி ஒற்றைச் சொல்தான், அதனை அழகுத் தமிழ் சொல்வதை விவரிக்கவே இது)

## தெளிவோமே! [KPA Poems Page 12]

சிந்தையில் ஒருமை கொண்டு
செஞ்சொல் தனை ஏற்றி,
வஞ்சனை மனதில் இன்றி
வருவதை ஏற்று வாழ்ந்து,
நஞ்சிலா மனத்தினோடு
நன்மைகள் செய்து வாழ்வார்,
எஞ்ஞான்றும் எவ்விடத்தும் இறையைத்
தான் உணர்ந்து கொள்வார்!
விஞ்சும் பிறவி உண்டோ?
வியத்தகு மனம் தான் உண்டோ?
இம்மை மறுமை என்று
எழுதிய கதைகள் வேண்டா!
எல்லாமாய் அல்லதுமாய் இருக்கின்ற
ஒரு நிலையே பரம்பொருளாம்!
[7:57 am, 21/05/2023]

## ஒடிசா விபத்து!

[KPA Poems Page 12]
இறப்பின் முகவரி,
யாவருக்கும் ஒன்றாய்;
எப்படி எழுதினான்?
அந்த இறைவன்!

தேடிய பயணம்,
மகிழ்ந்த பயணம்!
தந்தை தாயைக் காண,
காதலியை
மனைவியை,
மக்களைக் காண
தேடிய பயணமோ!

பொருள் தேடி,
பணி தேடி,
நடந்த பயணமோ!

உறவுகள் தேடியோ,
ஏதோ ஒன்றில்,
நிலையும் மனத்தை,
நிலையா நிலையாய்,
ஆக்கிய விபத்து!

காரணம் கண்டு,
கவனம் கொள்ளலாம்!
ஆனால்,
இறந்தவர், இழந்தவர்,
கணக்கைச் சொல்ல,
உறவும் இல்லாதார்!

இறப்பு என்பது,
இயன்நிலை ஆயினும்,
மானுடன் தவறோ!
மகேசன் விதியோ!
யாரை யார் என்று,
எங்கே தேடி,
எப்படி அறிவது?
கவிவளவன்.
04-06-2023

## சாக்கடைப் பச்சை!

# சாக்கடைப் பச்சையென்று,
செந்தமிழ் சொல் செய்து,
சிந்திக்க வைத்தோனே!
செந்தமிழின் நாயகனே!
தருண்கிருஷ்ணாவே!

# "ஒவ்வொரு சொல்லும்,
பொருள் குறித்தனவே!"
என்பது, தொல்காப்பியம்!

கல்லுதலால், அது கல்வி!
வழியாகி நிறைவதால், அது கால்!
பாய்கால், வடிகால்,
வாய்க்கால் வடிகாலாகி;
கால்வாய் ஆகிப் பின் "காவா" ஆக,

# வீட்டில் வடிநீர் கடைநீர் ஆவதால்,
சாக்கடை ஆகிட,
தேங்கும் நீரில் கொசுக்கள் நிறைய,
நீரும் நிறம்மாறி,
கருமையும் இன்றி பச்சையுமின்றி,
பரிமளித்தாலும், நாற்றமெடுத்தாலும்,

ஆண்களுக்கு வண்ணம் ஏழு,
ஆனால் பெண்களுக்கோ அது,
இருபத்தி இரண்டாம்!
அந்நிலையில்,
அதன் வண்ணத்துக்கு,
பெயர் வைத்த நாயகனே நீ வாழ்க!
கு.ப. அசோகன், 22-05-2023
(நண்பகல் 01.40)

## அறிக! [KPA Poems Page 12]

தோளுக்கு வாள்தாங்கி,
தொடர்ந்தோடும் மனதில் தான்,
தேளும் பாம்புமந்த
தெய்வத்தின் வடிவமென்று,
தோன்றிட வழியுமுண்டோ!
எவ்வுயிரும் தம்முயிராய்
நினைக்கின்ற உள்ளம் தான்
இயல்பைத் தானுணர்து
இறையாய் மனம் நிறையும்!
[8:04 am, 21/05/2023]

## *வெற்றி காண்போம்!* [KPA Poems Page 12]

கண்களில் காட்சி நிலையானால்,
காதல் என்றே பெயர் சொல்வோம்!
மண்ணில் பயிர்கள் செழித்திருந்தால்,
மாமழைப் போற்றும் மனம் கொள்வோம்!
எண்ணம் தன்னில் நிறைவிருந்தால்,
யாவிலும் வெற்றியைத் தானடைவோம்!
திண்ணமாய்ச் செயல்நிலை கொண்டிருந்தால்,
தேர்ந்திடும் யாவிலும் வெற்றி என்போம்!

## *அழகோ! வடிவோ!*

அகத்தின் அழகே முகத்தில் தெரியும்!
இகத்தில் மாந்தர் பெருமை கொள்ளும்,
அழகோ வடிவில், அதுதான் மெய்யோ!
புன்னகை தவழ்ந்து பொலியும் வடிவே,
உள்ளம் பேசும் உண்மையின் கோலம்!
கவிவளவன் 01-06-2023

**மனமே எழுக!** [KPA Poems Page 12]
சுகம் தேடி சோதனைகள் பல கடந்து,
இல் வாழ்வில் யாவும் அடைந்தோம் என்று;
நடக்கையிலே, முட்டியும் தான் வலிக்கும்,
முகமதிலே திரை விழும்!
கொட்டியே தலைமுடியும் கோலத்தை தான் மாற்றும்!
கட்டுடனே தான்  இருந்தால் காட்டும் நரைக் கோலம்!
எட்டுத்திக்கும் தொலைவாகும்!
பிடித்த உணவும் விடமாகும்!
கட்டாய்ச் சேர்த்த பணம், கனிவைத் தான் தருமோ!
காதலைத்தான் பெறுமோ!
முட்டாக மனதிலே பலவற்றை மோதித் திணிக்காமல்,
கிட்டும் யாவையுமே கொட்டியும் அளக்காமல்,
தட்டுத்தடுமாறி தான் விழும் முன்னே;
கிட்டிய வாழ்க்கையிலே, மகிழ்ச்சியோடு
தான் இருக்க மனத்தைத் தேற்றி விடு!
மனமே நிறையாம்! மனமே அறிவாம்!
மனமே மகிழ்வாம்!

**கவிவளவன்** 04-05-2023 (காலை- 07.55)